# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2050/34 - 2017 දෙසැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.12.21

*2050/34 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி 1978 (iv)*

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் நீதியமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

தலதா அதுகோறளை,
நீதி அமைச்சர்.

கொழும்பு,
2017, திசெம்பர் 19.

ஒழுங்குவிதிகள்

1. இதற்கான அட்டவணையின் நிரல் I இல் தரப்பட்டுள்ள நீதிமன்றம், வழக்கு நடவடிக்கைகளின் வகுதியை அல்லது இதற்கான அட்டவணையின் நிரல் II இல் நேரொத்த பதிவீட்டில் தரப்பட்டுள்ள வழக்குத் தொடுப்புக்களை, வழக்கு நடவடிக்கைகளை அல்லது கருமங்களை கேட்டுத் தீர்மானிப்பதற்கு இத்தால் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்றது.

2. 2017, மாச்சு 27 ஆந் திகதியிடப்பட்ட 2012/5 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியானது இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II |
|---|---|
| நீதிமன்றம் | வழக்குத்தொடுப்புக்கள், வழக்கு நடவடிக்கைகள் அல்லது கருமங்கள் |
| கொழும்பு நீதி வலயத்தில் நடாத்தப்படும் இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம். | 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தினால் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்ட சொல்லப்பட்ட சட்டத்தின் கீழான எல்லா வழக்குத் தொடுப்புக்கள், வழக்கு நடவடிக்கைகள் அல்லது வேறு எவையேனும் கருமங்கள் மேல் நீதிமன்றத்தினால் கேட்கப்பட்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும். |

1- 162


1A - PG 3834 - 507 (2017/ 12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.